ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2219/43 - 2021 මාර්තු මස 17 වැනි බදාදා - 2021.03.17

*2219/43 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2019 இன் 23 ஆம் இலக்க, இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனை (கூட்டிணைத்தல்) சட்டம்**

முகாமைத்துவ விதிகள்

2019 இன் 23 ஆம் இலக்க, இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 7 வது பிரிவின்கீழ் இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனையால் ஆக்கப்பட்ட விதிகள்.

பொறியியலாளர் கர்னல் (ஓய்வுபெற்ற) **நிஸ்ஸங்க என். விஜேரத்ன,**
செயலாளர் நாயகம்/பிநிஉ.

இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனை,
செஞ்சிலுவைக் கட்டிடம், 8 வது மாடி,
இலக்கம் 106, தர்மபால மாவத்தை,
கொழும்பு 07,
2020, சனவரி 31.

**விதிகள்**

1. இந்த விதிகள் 2020 இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனை முகாமைத்துவ விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, இந்த விதிகள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு பணிமனை முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும் நிர்வகிக்கப்படல் வேண்டும்.

1A - PG 5349 — 30 (2021/03)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*3.* **பொருள் கோடல்**.- இந்த விதிகளில் வேறுவிதமாக தேவைப்படுத்தப்பட்டாலேயொழிய பின்வரும் சொற்களும் வெளிப்படுத்தல்களும் கீழே குறிப்பிடப்பட்ட பொருள்கொண்டவையாக அமையும்.

| | |
|---|---|
| 'பணிமனை' | என்பதன் மூலமாக இந்த சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனைகருதப்படுகின்றது. |
| 'பேரவை' | என்பதன் மூலமாக இதனூடாக தாபிக்கப்படுகின்ற பேரவையின் அப்போதைக்கான உறுப்பினர்கள் கருதப்படுகின்றது. |
| 'உறுப்பினர்' | என்பதன் மூலமாக பதிவேட்டில் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தாபிக்கப்பட்ட சபை அல்லது எவரேனுமாக கருதப்படுகின்றது. |
| 'சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி' | என்பதன் மூலமாக 50 பேருக்கு குறைவான ஊழியர்களை அல்லது 5.0 மில்லியன் ரூபாவுக்கு குறைவான மூலதனத்தைக்கொண்ட 50 மில்லியன் ரூபாவினைவிடக் குறைவான வருடாந்த புரள்வினைக் கொண்ட ஏதேனும் தொழில் முயற்சி கருதப்படுகின்றது. |
| 'பதிவேடு' | என்பதன் மூலமாக இந்த விதிகள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான உறுப்பினர்களின் பதிவேடு கருதப்படுகின்றது. |
| 'மாதம்' | என்பதன் மூலமாக பஞ்சாங்க மாதமொன்று கருதப்படுகின்றது. |
| 'வருடம்' | என்பதன் மூலமாக பஞ்சாங்க வருடமொன்று கருதப்படுகின்றது. |
| 'சட்டம்' | என்பதன் மூலமாக 2019 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனை (கூட்டிணைத்தல்) சட்டம் கருதப்படுகின்றது. |

இந்த விதிகளில் ஒருமை எண்ணிக்கையால் குறிக்கப்படுகின்ற சொற்களில் பன்மை எண்ணிக்கை உள்ளடங்கும், ஆண்பால் குறிக்கப்படுகின்ற சொற்களில் பெண்பாலும் நடுநிலை பாலினமும் அதைப்போலவே மறுதலையாகவும் உள்ளடங்கும்.

ஆட்களைக் குறிக்கின்ற சொற்களில் இயற்கையான ஆட்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் கூட்டிணைக்கப்படாத ஆட்களின் தொகுதி உள்ளடங்கும்.

இதன்கீழ் ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு பொருள்கோடல் வழங்கும் இறுதி அதிகாரசபையாக விளங்குவது பேரவையாக அமைவதோடு பேரவையின் தீர்மானம் இறுதியானதும் பணிக்கும் விதியாகவும் அமையும்.

*4.* இந்த விதிகளின் பிரகாரம் உறுப்பாண்மையில் சேர்க்கப்படுகின்ற ஆட்கள் தவிர்ந்த வேறு எந்தவோர் ஆளும் பணிமனையின் உறுப்பினராதலாகாதென்பதோடு அதற்கமைவாக உறுப்பினர்அப்பதிவேட்டில் உள்ளக்கப்படல் வேண்டும்.

5. **உறுப்பாண்மை :**

(அ) நிர்மாணத் தொழிலுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புபட்டுள்ள நிறுவனங்கள், சங்கங்கள், கம்பெனிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்களின் அமைப்பு மற்றும் இயற்கையான ஆட்கள் பணிமனையில் உறுப்பினர்களாவதற்கான தகைமைகளைப் பெறுவர்.

(ஆ) உறுப்பாண்மை எட்டு தொகுதிகளைக் கொண்டதாகும், அவையாவன:

***நிறுவனம்சார் உறுப்பினர்கள்*** - பேரவையினால் நிறுவனம்சார் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப் படுகின்ற கல்வி நிறுவனங்கள், நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள்

***நியதிச்சட்ட முகவராண்மை உறுப்பினர்கள்*** - பேரவையினால் நியதிச்சட்ட முகவராண்மை உறுப்பினர் களாக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களும்

***கூட்டாண்மை உறுப்பினர்கள்***- *பேரவையினால் கூட்டாண்மை உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற பேரவையினால் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழில்முயற்சி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்களின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் பெரும்பான்மை உரித்துவம் இலங்கையரால் வகிக்கப்படுகின்றதுமான கூட்டமைக்கப்பட்ட நிறுவனங்கள்*

**வெளிநாட்டுக் கூட்டாண்மை உறுப்பினர்கள்**- *பேரவையினால் வெளிநாட்டுக் கூட்டாண்மை உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற, பேரவையால் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழில் முயற்சி செயற்பாடுகளில் இலங்கையில் ஈடுபட்டுள்ளதும் இலங்கைக்கு வெளியில் மற்றும் / அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட வெளிநாட்டுக் கூட்டாண்மை நிறுவனங்கள்*

***சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி உறுப்பினர்கள்***- *பேரவையினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்களின்கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறும் கூட்டிணைக்கப்பட்ட இந்த தொகுதியில் கொள்ளப்படுகின்றதுமான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி உறுப்பினர்கள்*

***தனியாள் உறுப்பினர்கள்*** - *பேரவையினால் தனியாள் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற இயற்கையான ஆட்கள்*

**கௌரவ உறுப்பினர்கள்**- *இராஜதந்திரத்தின், அரசியல் மேதகைப் பண்பின், பகிரங்க சேவையின், வியாபாரப் பிரிவின், சிவில் சமூகத்தின் கீர்த்திமிக்க ஆட்கள் அல்லது நிர்மாணத்தொழில் பணிமனைக்கு தனித்துவமான சேவையை வழங்கியுள்ள ஆட்கள் பேரவையின் தற்றுணிபின் பிரகாரம் கௌரவ உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவர். கௌரவ உறுப்பினர்களுக்கு பேரவைக்கான உறுப்பினர்களை பெயர்குறிக்கவோ அல்லது பணிமனையின் பொதுச்சபைக் கூட்டத்தில் வாக்களிக்கவோ உரிமை இருத்தலாகாதெனும் போதிலும் ஏதேனும் பொதுச்சபை கூட்டத்திற்கு வருகைதரவும் உரையாற்றுவதற்கும் உரிமையுண்டு. அத்தகைய உறுப்பினர்களிடமிருந்து பேரவையால் தீர்மானிக்கப்படுகின்றவாறான சலுகை நிறைந்த பங்களிப்புக் கட்டணமொன்று அறவிடப்படலாம்.*

**கௌரவ ஆயுட்கால உறுப்பினர்கள்**- *உள்நாட்டு நிர்மாணத் தொழிலுக்கு முனைப்பாகத் தெரிகின்ற வகையிலான பங்களிப்பினை வழங்கியுள்ள மற்றும் 5 வருடங்களுக்கு மேலாக பணிமனைக்கு கணிசமான சேவையை ஈடேற்றியுள்ள ஆட்கள் பேரவையின் தற்றுணிபின் பிரகாரம் கௌரவ ஆயுட்கால உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவர். கௌரவ ஆயுட்கால உறுப்பினர்களுக்கு பேரவைக்கான உறுப்பினர்களை பெயர்குறிக்கவும் அல்லது பணிமனையின் பொதுச்சபைக் கூட்டங்களில் பங்கேற்கவும், ஏனைய விடயங்கள் சம்பந்தமாக பேரவையிலும் பொதுச்சபைக் கூட்டத்திலும் வாக்களிக்கவும், அக்கூட்டங்களில் உரை நிகழ்த்தவும் இயலும். அந்த உறுப்பினர்கள் பங்களிப்புக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும்.*

**வாக்களிக்க இயலாத உறுப்பினர்கள்**- *பேரவையினால் வாக்குகள் அற்ற உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற ஆட்களின் தொகுதி, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத மற்றும் இயற்கை ஆட்கள். இந்த உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாதென்பதோடு பேரவையினால் குறித்துரைக்கப்படுகின்ற சலுகைநிறைந்த பங்களிப்புக் கட்டணமொன்று அறவிடப்படலாம்.*

*(இ) பணிமனையின் உறுப்புரிமைக்காக சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான அளவுகோல்களுடன் ஏற்புடையதாக பேரவையால் சட்டங்கள் விதிக்கப்படலாமென்பதோடு உறுப்பாண்மைக்கான ஏதேனும் விண்ணப்பப் பத்திரம் அந்த சட்டங்களில் விதந்துரைக்கப்பட்ட மாதிரியிலானதாக அமைதலும் வேண்டும்.*

*(ஈ) மேலே குறிப்பிடப்பட்ட விதிகளின் அடிப்படையில் அந்த விண்ணப்ப பத்திரம் சம்பந்தமாக பேரவை தீர்மானித்தல் வேண்டுமென்பதோடு பேரவையின் எந்தவோர் தீர்மானமும் இறுதியானதும் தீர்வுக்கட்டமானதுமாக அமைதல் வேண்டும்.*

*(உ) இங்கு அதற்கு முரணாக எது கூறப்பட்டிருப்பினும், சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட முன்னர் இருந்த பணிமனையின் உறுப்பினர்கள், பணிமனையின் உறுப்பினர்களாக கருதப்படல் வேண்டுமென்பதோடு அந்த உறுப்பினர்களால் வகிக்கப்படுகின்ற உறுப்பாண்மைத் தொகுதிக்கு ஏற்புடைத்தாகின்ற உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் அமுலாக்கவும் அனுபவிக்கவும் இயலுமென்பதோடு விதிகளிலும் சட்டத்திலும் உள்ளடங்கிய நேரொத்த கடப்பாடுகளுக்கு கட்டுப்படலும் வேண்டும்.*

6. **உறுப்பாண்மையை முடிவுறுத்துதல் :**

(i) கீழே காட்டப்படுகின்ற ஏதேனுமொன்று காரணமாக உறுப்பினரொருவர் அந்நிகழ்வாலே உறுப்பினராதல் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

(அ) உறுப்பினரொருவர் கடனிறுக்கவகையற்றவர் என தீர்ப்பளிக்கப்பட்டால் அல்லது செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டால் அல்லது கடன் கொடுனர்களுடன் இணக்கத்திற்கு வந்தால்:

(ஆ) உரிய திகதிக்கு முன்னர் வருடாந்த பங்களிப்புத் தொகையை செலுத்துவதை தவறவிட்டால் அல்லது பணிமனைக்குச் செலுத்தவேண்டிய வேறு ஏதேனும் பணத்தொகையை செலுத்துவதை தொடர்ச்சியாக தவறவிட்டால் அல்லது மறுத்தால் எவ்வாறாயினும் பங்களிப்புத் தொகையையோ செலுத்தவேண்டிய வேறு பணத்தொகையையோ நிலுவைத் தொகையுடன் செலுத்துவதன் பேரில் சபையின் பிரேரணை நிறைவேற்றப்படுவதன் மூலமாக அவர் மீண்டும் உறுப்பாண்மையில் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

(இ) உறுப்பினரொருவர் சட்டத்தின் அல்லது பணிமனையின் விதிகளில் உள்ள ஏதேனும் ஏற்பாடுகளுக்கிணங்க செயலாற்றத் தவறினால் பொதுச்செயலாளர் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஊடாக பேரவை பதிவஞ்சல் மூலமாக அவ்வாறு செய்யுமாறு அவருக்கு அறிவித்து இரண்டு வார காலப்பகுதிக்குள்

(ii) பொதுச்செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கு எழுத்தில் ஒரு பஞ்சாங்க மாதத்திற்குள் அறிவித்தல் கொடுப்பதன் மூலமாக எந்தவோர் உறுப்பினரும் விலகலாம். ஆனால் அவர் ஒரு பஞ்சாங்க வருடத்தின் சனவரி மாதம் முதலாந் திகதிக்கும் யூன் மாதம் 30 ஆந் திகதிக்கும் இடையில் இந்த இரண்டு திகதிகளையும் உள்ளடக்கிய திகதியொன்றில் விலகினால் வருடாந்த பங்களிப்புத் தொகையின் அரைவாசியை செலுத்த கடப்பாடு கொண்டவராவார். யூன் 30 ஆந் திகதிக்குப் பின்னர் அவர் விலகினால் வருடாந்த பங்களிப்புத் தொகையின் மொத்தப் பணத்தொகையையும் செலுத்த அவர் கடப்பாடுடையவராவார்.

(iii) 13 (ஆ)(ii) பிரிவின் பிரகாரம் உறுப்பினர்களின் வேண்டுகோளின் பெயரால் குறித்துரைத்த பணிக்காக அழைப்பிக்கப்பட்ட பணிமனையின் அதிவிசேட மகாசபைக் கூட்டத்தில், வருகை தந்துள்ள மற்றும் அங்கு வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பதிலாள் நிலையை வகிப்பவர்கள் அல்லது தனித்தனி உறுப்பினர்களாக அமையுமிடத்து அந்த உறுப்பினர்களால் தனிப்பட்டரீதியாக அல்லது பதிலாட்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற பிரேரணை நிறைவேற்றம் மூலமாக தமது நடத்தையால் தாம் பணிமனையின் உறுப்பாண்மையை வகிக்க பொருத்தமற்ற நிலைமைக்கு மாறியுள்ள அல்லது அந்த உறுப்பினரின் செயற்பாடுகள் பணிமனையின் நன்மைக்கு பாதகமானதாக அமையுமிடத்து எந்தவோர் உறுப்பினரையும் வெளியேற்ற இயலும். அவ்வாறு வெளியேற்றப்பட்ட உறுப்பினர் அதன்பின்னர் உறுப்பினராக இருத்தல் முடிவுறுத்தப்படும். இந்த பந்தியின் நோக்கத்துக்காக அதற்கான பிரேரணை நிறைவேற்றப்படுதல் மற்றும் அந்த கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளில் அது பதிவுசெய்யப்படுதல் மற்றும் பணிமனையின் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தப்படல் போதுமானதாக அமையும்.

(iv) பெரும்பான்மைத் தீர்மானம் மூலமாக பேரவை அதன் அபிப்பிராயத்திற்கிணங்க தனது நடத்தை மூலமாக தான் பணிமனையின் உறுப்பினராக இருப்பதற்கான தகைமையற்றவராக மாறியுள்ள எந்தவோர் உறுப்பினரையும் இடைநிறுத்தி அந்த உறுப்பினரை வெளியேற்றுமாறுஅதிவிசேட பொதுச்சபைக் கூட்டத்திற்கு விதப்புரை செய்ய இயலும். பேரவையால் அத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் 21 நாட்களுக்கு குறையாத காலப்பகுதிக்குள்ளான திகதியொன்றில் பொதுச்செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரால் மேற்படி விதப்புரையை பரிசீலனை செய்வதற்காக அதிவிசேட மகாசபைக் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்படல் வேண்டும். வருகைதந்துள்ள மற்றும் வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பதிலாட்கள் மற்றும் தனித்தனி உறுப்பினர்களாக அமையுமிடத்து அந்த உறுப்பினர்களால் தனிப்பட்ட முறையில் அல்லது அவர்களின் பதிலாட்கள் மூலமாக அங்கீகரித்துக் கொள்ளப்படுகின்ற பிரேரணை நிறைவேற்றம் மூலமாக பேரவையால் சம்பந்தப்பட்ட உறுப்பினர் வெளியேற்றப்படல் வேண்டும். அவ்விதமாக வெளியேற்றப்பட்ட எவரேனும் உறுப்பினர் அதன் பின்னர் உறுப்பினராதல் முடிவுறுத்தப்படும்.

(v) இந்த பிரிவின் பிரகாரம் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ள வேளையில் அல்லது உறுப்புரிமை முடிவுறுத்தப்பட்டுள்ளவிடத்து, அதனாலேயே உறுப்பாண்மை முடிவுறுத்தப்படும்.

**7. கட்டணங்கள் :**

(அ) சேர்த்துக்கொள்ளல் கட்டணம்.- பேரவையால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படுகின்ற வகையில் ஒவ்வோர் உறுப்பினரிடமிருந்தும் சேர்த்துக்கொள்ளல் கட்டணம் அறவிடப்படல் வேண்டும்.

(ஆ) பங்களிப்புக் கட்டணம்.- பேரவையால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படுகின்ற வகையில் ஒவ்வோர் உறுப்பினரிடமிருந்தும் பஞ்சாங்க வருடத்தை அடிப்படையாக்கொண்டு வருடாந்த பங்களிப்புக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். உறுப்பினர்கள் ஏதேனும் ஒரு வருடத்திற்கான வருடாந்த பங்களிப்புக் கட்டணத்தையும் பணிமனையினால் அறிவிக்கப்படுகின்ற வகையில், வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்குள் செலுத்துதல் வேண்டும். பங்களிப்புக் கட்டணம் நிலுவையாக உள்ள எவரேனும் உறுப்பினரின் பிரதிநிதிகளுக்கு அந்த வருடத்திற்கான பங்களிப்புக் கட்டணம் வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்குள் கிடைத்திருந்தாலேயொழிய பேரவையின், பணிமனையின், நிலையிற் குழுவின் அல்லது வேறேதேனும் குழுவின் எந்தவொரு கூட்டத்திற்கும் வருகைதர அல்லது பங்கேற்க உரிமை கிடையாதென்பதோடு பணிமனையின் உத்தியோகத்தரொருவராக செயலாற்ற அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அதன் பேரவையில் அல்லது நிலையியற் குழுவில் அல்லது வேறேதேனும் குழுவில் உத்தியோகத்தராக செயலாற்றவும் இயலாது.

(இ) சேர்த்துக்கொள்ளப்படுகையில், பணிமனையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளல் கட்டணங்களையும் ஒரு வருடத்திற்கான பங்களிப்புக் கட்டணங்களையும் செலுத்துதல் வேண்டும். முதலாவது வருடம் நிறைவடைகையில் சம்பந்தபபட்ட வருடத்தின் திசெம்பர் 31 வரையான உறுப்பாண்மையை புதுப்பித்துக்கொள்ளும் பொருட்டு அத்தகைய உறுப்பினர்கள் விகிதாசாரரீதியான பங்களிப்புக் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு வருடத்தினதும் சனவரி மாதம் முதலாந் திகதியில் இருந்து வருடாந்த பங்களிப்புக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(ஈ) உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற சேர்த்துக் கொள்ளல் கட்டணமும் வருடாந்த பங்களிப்புக் கட்டணமும் பேரவையினால் காலத்திற்குக்காலம் மாற்றப்பட இயலுமென்பதோடு வேறு ஏதேனும் கட்டணத்தையும் பணிமனையின் நன்மைகருதி காலத்திற்குக்காலம் மாற்ற இயலும்.

**8. பேரவை உறுப்பினர்களின் பிரதிநிதிகள்**

(அ) நிறுவனம்சார் உறுப்பினர்கள்

(i) ஒவ்வொரு நிறுவனம்சார் உறுப்பினராலும் ஒரு (01) பிரதிநிதியை பேரவைக்காக பெயர்குறிக்கும் உரிமை உள்ளதோடு அவருக்கு வாக்களிக்கும் உரிமையும் உள்ளதோடு அவ்வாறு பெயர்குறிக்கப்பட்ட ஆட்கள் அடுத்த வருடத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தின் இறுதிவரை பதவி வகித்தல் வேண்டும்.

(ii) சம்பந்தப்பட்ட நிறுவனம்சார் உறுப்பினரும் பிரதிநிதியை பெயர்குறித்தலை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இல்லாதொழித்து வேறொருவரை அதற்காக நியமிக்க இயலுமெனினும் அத்தகைய வேறோர் ஆளும் சம்பந்தப்பட்ட நிறுவனம்சார் உறுப்பினரின் ஆளுகைச் சபையின் உறுப்பினராதல் வேண்டும்.

(iii) பேரவையின் எந்தவொரு கூட்டத்திலும் ஒவ்வொரு நிறுவனம்சார் உறுப்பினரதும் பிரதிநிதிகள் எண்ணிக்கை எவ்வளவு என்பதை கவனத்திற் கொள்ளாமல் ஒவ்வொரு நிறுவனம்சார் உறுப்பினருக்கும் கூட்டத்திற்கு வருகைதந்துள்ள தனது பிரதிநிதிகள் மூலமாக ஒரு வாக்கினை மாத்திரம் அளிக்க உரிமை உண்டு.

(iv) இலங்கையில் இல்லாமை, சுகவீன நிலைமை அல்லது தனது சமுகமளியாமையை நியாயப்படுத்தக்கூடிய வேறேதேனும் ஏது காரணமாக உறுப்பினரொவரின் பிரதிநிதிக்கு ஏதேனும் கூட்டத்தில் பங்கேற்க இயலாதெனில், பேரவையின் அந்த கூட்டத்தில் பங்கேற்க ஆளுகைச் சபையின் அங்கத்தவராக இருக்கின்ற வேறொரு பிரதிநிதியை பெயர்குறிக்கவும் அவர் வருகைதராத காலத்தில் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் அவர் சார்பாக செயலாற்றவும் அந்த பிரதிநிதிக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(ஆ) கூட்டாக செயலாற்றுகின்ற நியதிச்சட்டமுறையான முகவராண்மைகள் அனைத்தினதும் உறுப்பினர்களுக்கு அவர்களின் கூட்டான அபிலாஷைகளை பிரதிநிதித்துவம் செய்யும் பொருட்டு பிரதிநிதிகள் **நால்வரை (04)** பேரவைக்கு தெரிவு செய்வதற்கான உரிமை இருத்தல் வேண்டுமென்பதோடு தெரிவு செய்யப்பட்ட மேற்படி பிரதிநிதிகளுக்கு ஒவ்வொரு வாக்கு வீதம் இருத்தல் வேண்டும்.

(இ) கூட்டாக செயலாற்றுகின்ற அனைத்து கூட்டாண்மை உறுப்பினர்களுக்கும் அவர்களின் கூட்டான அபிலாஷைகளை பிரதிநிதித்துவம் செய்யும்பொருட்டு பிரதிநிதிகள் **எண்மரை** (08) பேரவைக்கு தெரிவுசெய்வதற்கான உரிமை இருத்தல் வேண்டுமென்பதோடு தெரிவு செய்யப்பட்ட மேற்படி பிரதிநிதிகளுக்கு ஒவ்வொரு வாக்கு வீதம் இருத்தல் வேண்டும்.

(ஈ) கூட்டாக செயலாற்றுகின்ற நியதிச்சட்டமுறையான முகவராண்மைகள் அனைத்தினதும் உறுப்பினர்களுக்கு அவர்களின் கூட்டான அபிலாஷைகளை பிரதிநிதித்துவம் செய்யும்பொருட்டு பிரதிநிதி **ஒருவரை** (01) பேரவைக்கு தெரிவு செய்வதற்கான உரிமை இருத்தல் வேண்டுமென்பதோடு தெரிவு செய்யப்பட்ட மேற்படி பிரதிநிதிக்கு ஒரு வாக்கு இருத்தல் வேண்டும்.

(உ) கூட்டாகச் செயலாற்றுகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர் உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர்களின் கூட்டான அபிலாஷைகளை பிரதிநிதித்துவம் செய்யும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் இருபத்தைந்து பேருக்கு (25) ஒரு பிரதிநிதி வீதம் **இரண்டு** (02) பிரதிநிதிகள் வரை பேரவைக்கு தெரிவு செய்துகொள்ள உரிமை இருக்க வேண்டுமென்பதோடு தெரிவுசெய்யப்பட்ட மேற்படி பிரதிநிதிகளுக்கு ஒவ்வொரு வாக்கு வீதம் இருத்தல் வேண்டும்.

(ஊ) கூட்டாக செயலாற்றுகின்ற அனைத்து தனியாள் உறுப்பினர்களுக்கும் அவர்களின் கூட்டான அபிலாஷைகளை பிரதிநிதித்துவம் செய்யும் பொருட்டு **ஒரு** (01) பிரதிநிதியை பேரவைக்கு தெரிவு செய்துகொள்ள உரிமை இருக்க வேண்டுமென்பதோடு தெரிவு செய்யப்பட்ட மேற்படி பிரதிநிதிக்கு ஒரு வாக்கு இருத்தல் வேண்டும்.

(எ) மேலே (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பிரதிநிதிக்கும் பேரவைக் கூட்டத்தில் ஒரு வாக்கிற்கான உரிமை இருத்தல் வேண்டும்.

இந்த சட்டம் மூலமாக கூட்டிணைக்கப்பட முன்னர் இருந்த பேரவையின் உறுப்பினர்கள், இந்த சட்டம் மூலமாக கூட்டிணைக்கப்பட்ட பின்னர் நடாத்தப்படுகின்ற முதலாவது வருடாந்த மகாசபைக் கூட்டத்தின் இறுதிவரை பதவி வகிக்க வேண்டிய போதிலும் தகைமையுடையவர்களாக அமைவதால் மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்காக முன்வர இயலும். அதன் பின்னர் மேற்சொன்ன பிரதிநிதிகள் அடுத்த வருடத்தின் வருடாந்த மகாசபைக் கூட்டத்தின் இறுதிவரை பதவி வகிக்க வேண்டும். இந்த பிரதிநிதிகளின் பதவிக்காலத்தில் தோன்றுகின்ற வெற்றிடம் ஏற்புடைய உறுப்பாண்மைத் தொகுதியின் பிரதிநிதிகள் மத்தியில் இருந்து பேரவையினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டுமென்பதோடு அவ்விதமாக வெற்றிடத்தைப் பூர்த்தி செய்கின்ற ஆள் அடுத்த வருடாந்த மகா சபையின் இறுதிவரை பதவி வகித்தல் வேண்டும்.

9. **பேரவை :**

(அ) பணிமனையின் அனைத்து கொள்கைத் தீர்மானத்தின் ஆக்கம் தொடர்பிலும் நிறைவேற்றுக் கருமங்கள் பொதுச் செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரிடம் கையளித்தல் தொடர்பிலும் பேரவை பொறுப்புக்கூறல் வேண்டும்.

(ஆ) சபை கீழே குறிப்பிடப்பட்டவர்களை உள்ளடக்குதல் வேண்டும்–

(i) பேரவையின் அல்லது வேறு ஏதேனும் கூட்டத்தில் ஒரு வாக்கிற்கு உரித்தான தலைவர், தெரிவு செய்யப்பட்டுள்ள தலைவர், பிரதித் தலைவர்கள் நால்வர், உடன்முந்திய முன்னாள் தலைவர் மற்றும் தலைவரால் பெயர் குறிக்கப்பட்ட உப தலைவரை உள்ளடக்கிய பதவி வகிப்போர் எட்டு (08) பேர் ;

(ii) 8 ஆவது பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பணிமனை உறுப்பினர்களின் பிரதிநிதிகள் ;

(iii) அவசியமானவகையிலும் அவசியமானவிடத்தும் தலைவரால் பெயர்குறிக்கப்படவுள்ள, உறுப்பாண்மை சங்கங்களின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட பிரிவைச்சேர்ந்த பத்து (10) ஆட்கள் அல்லது பணிமனைக்கு பங்களிப்பு காட்டக்கூடிய வேறு ஏதேனும் சிறப்பு அதிதி. அவ்விதமாக பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள் அடுத்த வருடத்தின் வருடாந்த மகாசபைக் கூட்டத்தின் இறுதிவரை பதவிவகிக்க வேண்டுமென்பதோடு அவர்களுக்கு வாக்குரிமை உரித்தாகாதென்பதோடு அவசியமேற்படின் மீண்டும் நியமிக்கப்பட இயலும்.

(iv) ஆயினும் உறுப்பினரொருவரின் எவரேனும் பிரதிநிதி பதவி வகிப்பவராக செயலாற்றுதல் அல்லது பதவி வகிப்பவராக இருத்தல் எதனாலும் தடுக்கப்பட இயலாததாக அமைதல் வேண்டும். அத்துடன் பணிமனையின் தலைவர் பெயர் குறித்த ஆட்கள் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி பெயர் குறித்தலை அகற்றிக்கொண்டு ஏற்படுகின்ற வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக பிறிதொருவரை தலைவரால் கடிதமொன்று மூலமாக நியமிக்க இயலும்.

(இ) நியதிச்சட்டமுறையான முகவராண்மை உறுப்பினர்களின், கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின், வெளிநாட்டு கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி உறுப்பினர்களின் மற்றும் தனியாள் உறுப்பினர்களின் பிரதிநிதிகளின் பெயர் முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் தெரிவு செய்யப்படுவதற்காக கீழே காட்டப்பட்ட நடவடிக்கைமுறை ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(i) நியதிச்சட்டமுறையான முகவராண்மை உறுப்பினர்களின், கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின், வெளிநாட்டு கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி உறுப்பினர்களின் மற்றும் தனியாள் உறுப்பினர்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்துகொள்ளும்பொருட்டு பணிமனையின் உறுப்பினர்களிடமிருந்து பெயர் முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்காக வருடாந்த மகாசபைக் கூட்டத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய திகதியொன்றை பொதுச் செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் குறித்துரைக்க வேண்டும்.

(ii) நியதிச்சட்டமுறையான முகவராண்மை உறுப்பினர்களின், கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின், வெளிநாட்டு கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி உறுப்பினர்களின் மற்றும் தனியாள் உறுப்பினர்களின் பிரதிநிதிகளின் பெயர் குறிக்கப்பட்ட ஆட்களுக்காக கையொப்பமிடுபவர்கள் மூன்று பேர் (03) அவசியமாவர். முதலாவது (1) அவரது நிறுவனத்தின்/சங்கத்தின்/கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் கையொப்பமிடுனர் இரண்டாவது (2) ஏனைய நிறுவனம்சார் நியதிச்சட்டமுறையான முகவராண்மை அல்லது கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின் கையொப்பமிடுனர்கள் இருவர்.

(iii) பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள், தமது அந்த பெயர் நியமனம் செய்தல்களை ஏற்றுக்கொள்ளலை பொதுச் செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரிடம் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(iv) பெயர்களின் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட மற்றும் ஒவ்வொரு பதவியின் கீழும் பட்டியலிடப்பட்ட முறைப்படி கிடைத்த பெயர் நியமனம் செய்தல்கள் பற்றிய கூற்றொன்றினை உள்ளடக்கிய அறிவித்தலொன்று செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

(v) நியதிச்சட்டமுறையான முகவராண்மை உறுப்பினர்களின், கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின், வெளிநாட்டு கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி உறுப்பினர்களின் மற்றும் தனியாள் உறுப்பினர்களின் பிரதிநிதிகள் கூட்டத்திற்கு வருகைதந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பதிலாட்களின் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(vi) வருடாந்த மகாசபைக் கூட்டத்தில் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் அல்லது பேரவை உறுப்பினர்கள் மத்தியிலிருந்து பேரவையால் நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் நுண்ணாய்வாளர் இருவர் வாக்குச் சீட்டுகளை பரிசோதிக்க வேண்டுமென்பதோடு பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆட்களை தலைவர் கூட்டத்தின்போது அறிவிக்க வேண்டும்.

(vii) தெரிவு செய்யப்பட்ட எவரேனுமாள் பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்தால் அடுத்த அதிகூடிய வாக்குகளை பெற்றுள்ளவர் தெரிவு செய்யப்பட்டதாக கருதப்படல் வேண்டும்.

(viii) மேலே கூறியவாறு நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் அடுத்த வருடத்தில் வருடாந்த மகாசபையின் இறுதி வரை பதவி வகித்தல் வேண்டும்.

(ஈ) நிறுவனம்சார் உறுப்பினர்களால் பேரவைக்காக பெயர்குறித்த ஆட்கள் வருடாந்த மகாசபை நிறைவடைந்து மூன்று வாரங்களுக்குள் கடிதமொன்று மூலமாக பொதுச் செயலாளருக்கு/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கு அறிவிக்கக்படல் வேண்டும். மேலே குறிப்பிட்டவாறு பெயர் குறித்த பிரதிநிதிகள் அடுத்த வருடத்தின் வருடாந்த பொதுச்சபை நிறைவடையும் வரை பதவி வகித்தல் வேண்டும்.

10. **முகாமைத்துவ சபை :**

(அ) முகாமைத்துவ சபையினால் பணிமனையின் நடவடிக்கைகள் முகாமைத்துவமும் நிர்வாகமும் செய்யப்படல் வேண்டுமென்பதோடு இந்த விதிகள் மூலமாக பேரவையின் அங்கீகாரம் அல்லது மகாசபைக் கூட்டமொன்றின் அங்கீகாரத்துடன் பணிமனையினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென விதிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் நீங்கலாக அந்த அனைத்து தத்துவங்களையும் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) சட்டத்தினால் கூட்டிணைப்பட முன்னர் இருந்த முகாமைத்துவ சபை சட்டத்தினால் (முன்னர் இயக்குனர் சபை) கூட்டிணைக்கப்பட முன்னர் நடாத்தப்படவுள்ள முதலாவது மகாசபைக் கூட்டத்தின் பின்னர் முதலாவது பேரவைக் கூட்டம் வரை பதவி வகித்தல் வேண்டும். இந்த பதவி வகிப்போர் தகைமையுடையவர்களாக அமைவதால் அதன் பின்னரும் பேரவை உறுப்பினர்களால் முகாமைத்துவ சபைக்கு மீண்டும் தெரிவு செய்யப்பட இயலும்.

(இ) முகாமைத்துவ சபை கீழே காட்டப்பட்ட பதவி தாங்குனர்கள் 09 பேர்களை உள்ளடக்குதல் வேண்டும்.

(i) தலைவர்

(ii) தெரிவு செய்யப்பட்டுள்ள தலைவர்

(iii) நான்கு பிரதித் தலைவர்கள்

(iv) உடன்முந்திய தலைவர்

(v) தலைவரால் பெயர்குறிக்கப்பட்ட பிரதித் தலைவர்

(vi) பொதுச் செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

(ஈ) தலைவரின் அழைப்பின்பேரில் பேரவைக்கு தெரிவு செய்யப்பட்ட பேரவை உறுப்பினர்கள் பத்து (10) பேர் மத்தியிலிருந்து முகாமைத்துவ சபை மற்றும் பணிப்பாளர் சபையிலும் பேரவையிலும் செயலாற்றும் பொருட்டு பெயர்குறிக்கப்பட்ட உப தலைவரொருவர் இருத்தல் வேண்டும்.

(உ) தலைவர் ஓய்வுபெறுகையில் அல்லது பதவியை துறக்கும்போது தெரிவு செய்யப்பட்ட தலைவர் வாக்கெடுப்பின்றி தலைவராக நியமிக்கப்படல் வேண்டும். நியதிச்சட்டமுறையாக கூட்டிணைக்கப்பட்ட பின்னர் தலைவரின் பதவிக்காலம் ஒரு தடவைக்கு கிட்டியதாக அமைகின்ற ஒரு வருடமான மொத்தமாக மூன்று தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். ஒரு 'தடவை' தொடர்ச்சியாக இரண்டு மகாசபைக் கூட்டங்களுக்குப் பின்னர் கிட்டிய முதலாவது மகாசபைக் கூட்டத்திற்கும் இடையிலான காலப்பகுதியாக அமைதல் வேண்டுமென்பதோடு இந்த காலப்பகுதி அண்ணளவாக ஒரு வருடமாக அமையும்.

(ஊ) பதவிக்காலத்திற்குள் வெற்றிடமாகின்ற தலைவர் பதவி, பொதுச் செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரால் அழைப்பு விடுக்கப்படுகின்ற விசேட பேரவைக் கூட்டத்தின்போது வாக்கெடுப்பின்றி தெரிவு செய்யப்பட்டுள்ள தலைவரால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(எ) தெரிவு செய்யப்பட்ட தலைவர், வருடாந்த மகாசபைக் கூட்டத்தின் பின்னர் முதலாவது கூட்டத்தில் கூட்டிணைக்கப்பட்ட பேரவையினால் பெரும்பான்மை விருப்பத்தின்பேரில் தெரிவு செய்யப்படல் வேண்டும். மேற்சொன்ன தெரிவு செய்யப்பட்ட தலைவர் இரண்டு வருடங்களுக்கு குறையாத காலப்பகுதிக்காக உப தலைவராக பேரவைக்கு சேவை வழங்கிய ஒருவராக அமைதல் வேண்டுமென்பதோடு தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் தலைவராக நியமிக்கப்படும் வரை வாக்கெடுப்பின்றி தொடர்ச்சியாக பதவி வகிக்க வேண்டும்.

(ஏ) பதவிக் காலத்தில் தோன்றுகின்ற தெரிவு செய்யப்பட்ட தலைவர் பதவியிலான ஏதேனும் வெற்றிடம், சம்பந்தப்பட்ட பணிக்காக அழைப்பு விடுக்கப்படுகின்ற பேரவையின் விசேட கூட்டத்தில் பெரும்பான்மையினரின் விருப்பத்தின் பேரில் பூர்த்தி செய்யப்படல் வேண்டுமென்பதோடு அதற்காக 10 (எ) பிரிவின் ஏற்பாடுகள் அவசியமான மாற்றங்களுடன் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படல் வேண்டும்.

(ஐ) தலைவரும் தெரிவுசெய்யப்பட்ட தலைவரும் 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 26 வது பிரிவின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளைக்கொண்ட ஆட்கள் அல்லது சட்டம் அல்லது கணக்கியல் துறைகளில் நிறைவான தொழில்வாண்மைத் தகைமைகளைப் பெற்ற ஆட்களாக அமைதல் வேண்டும்.

(ஒ) பதவிதாங்குனர்களுக்கான பெயர் நியமனங்களை பெற்றுக்கொள்ளலும் தெரிவுசெய்யப்படுவதற்காகவும் கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைமுறை ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படல் வேண்டும்.

(i) வருடாந்த மகாசபைக் கூட்டத்தின் பின்னர் நான்கு வாரங்களுக்கு குறையாத காலப்பகுதிக்குள் நடாத்தப்படவுள்ள முதலாவது பேரவைக் கூட்டத்தில் பதவிதாங்குனர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

(ii) நான்கு உப தலைவர்களை தெரிவுசெய்வதற்காக பணிமனையின் சபை உறுப்பினர்களிடமிருந்து பெயர் நியமனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வருடாந்த மகாசபைக் கூட்டத்திலிருந்து இரண்டு வாரங்களுக்கு குறையாத திகதியொன்று பொதுச் செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரால் குறிக்கப்படல் வேண்டும்.

(iii) நிறுவனஞ்சார் உறுப்பினர்களின் பிரதிநிதிகள் இருவரும் கூட்டாகச் செயற்படுகின்ற நியதிச்சட்டமுறையான முகவராண்மைகள், கூட்டமைக்கப்பட்ட, வெளிநாட்டுக் கூட்டமைக்கப்பட்ட அல்லது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி உறுப்பினர்களில் ஒருவர் உபதலைவர்களின் பெயர் நியமனங்களுக்கு அனுசரணை வகித்தல் வேண்டும்.

(iv) வாக்களிக்கும் உரிமையுள்ள பேரவை அங்கத்தவர்களின் பெரும்பான்மை விருப்பத்தின்பேரில், நான்கு உப தலைவர்கள் வருடாந்த மகாசபைக் கூட்டத்தின் பின்னரான முதலாவது கூட்டத்தில் கூட்டமைக்கப்பட்ட பேரவையினால் வருடாந்தம் நியமிக்கப்படல் வேண்டும். உப தலைவர்கள் ஒரு தடவைக்கு ஒருமறை மாத்திரமே நியமிக்கப்படல் வேண்டும். ஒரு 'தடவையாக' அமைய வேண்டியது அண்ணளவாக ஒரு வருட காலப்பகுதியாக அமைகின்ற தொடர்ச்சியான இரண்டு மகாசபைக் கூட்டத்திற்குப் பின்னரான கிட்டிய முதலாவது மகாசபைக்கு இடையிலான காலப்பகுதியாகும். உப தலைவராக தெரிவுசெய்யப்படுவதற்கான தகைமைகளைப் பெறவேண்டுமாயின் பேரவை உறுப்பினராக குறைந்த பட்சம் இரண்டு வருடங்கள் பேரவைக்கு சேவையாற்றி இருத்தல் வேண்டும்.

(v) விலகிச் செல்கின்ற முகாமைத்துவ சபையின் பதவி வகித்த உப தலைவர்களை மீண்டும் தெரிவுசெய்ய அல்லது வாக்களிக்கும் உரிமைகொண்ட எந்தவொரு பேரவை உறுப்பினரையும் தெரிவுசெய்ய பேரவைக்கு இயலும்.

(vi) தலைவர், தெரிவுசெய்த தலைவர் மற்றும் உடன்முந்திய முன்னாள் தலைவர் பதவிவகித்த பதவிக்காலத்திற்குள் வெற்றிடமாகின்ற ஏதேனும் பதவி, பேரவையில் தற்போது இருக்கின்ற உறுப்பினர்கள் மத்தியிலிருந்து பெரும்பான்மை வாக்குகளால் இடைக்கால அடிப்படையில் பேரவையின் அடுத்த கூட்டத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்விதமாக வெற்றிடத்தைப் பூர்த்திசெய்கின்றவர் அடுத்த மகாசபைக் கூட்டத்தின் பின்னர் முதலாவது மகாசபைக் கூட்டம்வரை பதவி வகித்தல் வேண்டும். அவ்விதம் தோன்றிய வெற்றிடம் இந்த பேரவைக் கூட்டத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டுமென்பதோடு அதற்காக 10 (எ) பிரிவின் ஏற்பாடுகள் அவசியமான மாற்றங்களுடன் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படல் வேண்டும்.

(ஓ) உடன் முந்திய முன்னாள் தலைவர், பதவிதாங்குனராக பதவிவழியாக செயலாற்றுதல் வேண்டும். அதற்கிணங்க அவரைத் தெரிவுசெய்தலானது எந்தவொரு மகாசபைக் கூட்டத்திலும் பேரவையின் நடவடிக்கைகளுக்கு ஏதேனும் பகுதியை ஆக்குதல் ஆகாது.

*11.* **பதவி தாங்குனர்களின் கடமைகள்**

(அ) **தலைவர் :**

இந்த பிரிவுகளில் வேறேதேனும் இடத்தில் உள்ளடங்கிய தத்துவங்கள் மற்றும் பணிகளுக்கு மேலதிகமாக தலைவர் பொதுவாக பணிமனையின் அனைத்துக் கூட்டங்களிலும் தலைமை வகிக்கவேண்டும். உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அல்லது வெளியாட்கள் அல்லது அமைப்பாண்மைகளுடன் எந்தவோர் உரையாடல் அரங்கிலும்

பேரவை மேற்கொள்கின்ற நடவடிக்கைகளின்போது பணிமனையை பிரதிநிதித்துவம்செய்ய மற்றும்/ அல்லது பணிமனையின் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளுடன் ஏற்படையதாகின்ற ஏதேனும் விடயம் சம்பந்தமாக பணிமனையின் சார்பாக பேசுவதற்கு அவருக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(ஆ) **தெரிவுசெய்த தலைவர்**

தலைவரின் பணியின்போது தெரிவுசெய்யப்பட்ட தலைவர் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்பதோடு தலைவர் சமுகமளித்திராத சந்தர்ப்பங்களில் பேரவையினதும் முகாமைத்துவ சபைக் கூட்டங்களிலும் தலைமை வகித்தல் வேண்டும். அவர் பணிமனையின் அலுவல்களை மேற்பார்வை செய்யவேண்டுமென்பதோடு முகாமைத்துவக் குழுவின் தலைவராகவும் அமைதல் வேண்டும்.

(இ) **உப தலைவர்கள்**

தலைவரின் பணிகளின்போது உப தலைவர்கள் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டுமென்பதோடு முகாமைத்துவ சபையினால் அவரிடம் கையளிக்கப்படுகின்ற திட்டவட்டமான பொறுப்புக்களை ஈடேற்றுதலும் வேண்டும்.

12. **முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் :**

(அ) அவசியமானவகையிலும் அவசியமானவிடத்தும் குறைந்த பட்சம் ஒரு வாரத்திற்கு ஒருதடவையேனும் முகாமைத்துவ சபைக் கூட்டம் நடைபெறுதல் வேண்டும்.

(ஆ) பொதுச் செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் முகாமைத்துவ சபைக் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கவேண்டும்.

(இ) கூட்டமொன்று பற்றி குறைந்த பட்சம் திட்டவட்டமான ஏழுநாள் அறிவித்தல் வழங்கப்படல் வேண்டுமென்பதோடு மேற்கொள்ளப்பட உள்ள அலுவல்கள் மற்றும் கூட்டங்கள் நடாத்தப்படுகின்ற இடம், திகதி மற்றும் நேரம் அந்த அறிவித்தலில் திட்டவட்டமாக காட்டப்படல் வேண்டும்.

(ஈ) கூட்ட நடப்பெண் முகாமைத்துவ சபையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்று (03) உறுப்பினர்களாக அமைதல் வேண்டும்.

(உ) வேறுவிதமாக குறித்துரைக்கப்பட்டிருந்தாலேயொழிய, வருகைதந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மை மூலமாகவே ஏதேனும் விடயம் நிச்சயித்துக் கொள்ளப்படல் வேண்டும்.

(ஊ) தலைவரின் அல்லது அவர் சமுகமளித்திராதவிடத்து உப தலைவரின் பணிப்பின் பேரில் அல்லது முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் மூவரால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான கோரிக்கையின்பேரில் விசேட கூட்டமொன்றிற்கான அழைப்பு விடுக்கப்படல் வேண்டும். கூட்டத்திற்கான அழைப்புவிடுக்கின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அலுவல்கள் நீங்கலாக வேறு எவ்விதமான அலுவல்களும் அங்கு மேற்கொள்ளப்படலாகாது. அத்தகைய கூட்டமொன்றின் நோக்கங்கள் அவசரமானதெனக் கருதப்படுமிடத்து, குறைந்தபட்சம் நாற்பத்தெட்டு மணித்தியால அறிவித்தல் விடுக்கப்படல் வேண்டும்.

(எ) செல்லுபடியாகும் ஒரு காரணமின்றி முகாமைத்துவ சபையின் உறுப்பினரொருவர் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு சமுகமளித்திராதவிடத்து முகாமைத்துவ சபையிலான அவரது உறுப்பாண்மை தானாகவே முடிவடைவதோடு அதன் பின்னர் பேரவை முகாமைத்துவ கூட்டத்திற்கு புதிய உறுப்பினரொருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

13. **பேரவைக் கூட்டங்கள் :**

(அ) அவசியத்திற்கேற்பவும் அவசியமானவிடத்தும் குறைந்தபட்சம் மாதமொரு தடவையேனும் பேரவைக் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும்.

(ஆ) பொதுச் செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பேரவைக் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்க வேண்டும்.

(இ) கூட்டமொன்று பற்றி குறைந்தபட்சம் திட்டவட்டமான ஏழுநாள் எழுத்திலான அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்பதோடு மேற்கொள்ளப்படவுள்ள அலுவல்கள் மற்றும் கூட்டம் நடாத்தப்படுகின்ற இடம், திகதி மற்றும் நேரம் அந்த அறிவித்தலில் திட்டவட்டமாக காட்டப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டநடப்பெண் மொத்த உறுப்பாண்மையின் உறுப்பினர்களில் ஐந்திலொன்றாக (1/5) அமைதல் வேண்டும்.

(உ) வேறுவிதமாக திட்டவட்டமாக காட்டப்பட்டிருந்தாலேயொழிய, வருகைதந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மையுடனேயே நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

(ஊ) தலைவரின் அல்லது அவர் சமுகமளியாதவிடத்து உப தலைவரின் பணிப்பின் பேரில் அல்லது பேரவை உறுப்பினர்கள் மூவரால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான கோரிக்கையின்பேரில் விசேட கூட்டமொன்றுக்கு அழைப்புவிடுக்க வேண்டும். கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கின்ற அறிவித்தலில் குறிப்பிட்ட அலுவல்கள் நீங்கலாக வேறு எந்தவொரு அலுவலும் அங்கு புரியப்படலாகாது. அத்தகைய கூட்டமொன்றின் நோக்கம் அவசரமானதென கருதப்படுகின்றவிடத்து குறைந்த பட்சம் நாற்பத்தெட்டு மணித்தியால அறிவித்தல் விடுக்கப்படல் வேண்டும்.

(எ) செல்லுபடியாகும் ஒரு காரணமின்றி முகாமைத்துவ சபையின் உறுப்பினரொருவர் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு சமுகமளித்திராதவிடத்து முகாமைத்துவ சபையிலான அவரது உறுப்பாண்மை தானாகவே முடிவடைவதோடு அதன் பின்னர் பேரவை முகாமைத்துவ கூட்டத்திற்கு புதிய உறுப்பினரொருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

***14. மகாசபைக் கூட்டங்கள் :***

***(அ) வருடாந்த மகாசபைக் கூட்டம்***

(i) பணிமனை ஒவ்வொரு வருடத்திலும் பிற ஏதேனும் மகாசபைக் கூட்டங்களுக்கு மேலதிகமாக, தனது வருடாந்த பொதுச்சபைக் கூட்டமாக மகாசபைக் கூட்டத்தையும் நடாத்துதல் வேண்டுமென்பதோடு அதற்கான அழைப்புவிடுக்கின்ற கூட்டத்தில் அந்த கூட்டம் பற்றி திட்டவட்டமாக காட்டப்படுதல் வேண்டும். நிதியாண்டு நிறைவடைந்து ஆறு மாதங்களுக்குள் பேரவையால் நிச்சயிக்கப்படுகின்றவாறு ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்திலும் ஏதேனும் தினமொன்றில் வருடாந்த மகாசபைக் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும்.

(ii) கீழே குறிப்பிட்ட காரணங்களுக்காக வருடாந்த மகாசபைக் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும்.

(அ) பேரவையின் அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல்

(ஆ) முந்திய நிதியாண்டுக்காக கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுகள் மற்றும் ஐந்தொகையை பெற்றுக்கொள்ளல்

(இ) நியதிச்சட்டமுறையான முகவராண்மை உறுப்பினர்களுக்காக பிரதிநிதிகளை தெரிவுசெய்தல்

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தல்.

(உ) வெளிநாட்டு கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தல்.

(ஊ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உறுப்பினர்களுக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தல்.

(எ) தனியாள் உறுப்பினர்களுக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தல்.

(ஏ) கணக்காய்வாளர்களை நியமித்தல்

(ஐ) உரியவகையில் அறிவிக்கவேண்டிய பிற ஏதேனும் அலுவல்.

(iii) வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கான அழைப்புவிடுக்கும் அறிவித்தலுடன், பேரவை கீழே காட்டப்பட்ட ஆவணங்களை உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

(அ) பேரவைக்கு தெரிவுசெய்வதற்காக நியதிச்சட்டமுறையான முகவராண்மை உறுப்பினர்கள், கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள், வெளிநாட்டு கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர் உறுப்பினர்கள் மற்றும் தனியாள் உறுப்பினர்களால் பெயர்குறிக்கப்பட்ட ஆட்களின் பெயர்கள்.

(ஆ) தலைவர், உடன்முந்திய தலைவர் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களின் பெயர்கள்.

(இ) முந்திய நிதியாண்டுக்கான வருடாந்த அறிக்கையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளும்

**(ஆ) அதிவிசேட மகாசபைக் கூட்டங்கள்**

(i) வருடாந்த மகாசபைக் கூட்டம் நீங்கலாக ஏனைய அனைத்து மகாசபைக் கூட்டங்கள் அனைத்தும் அதிவிசேட மகாசபைக் கூட்டங்களாக கருதப்படல் வேண்டும்.

(ii) தலைவரது அல்லது பேரவையின் பணிப்பின்பேரில் பெயர்ப்பட்டியலில் உள்ள உறுப்பினர்களில் பத்திலொன்றுக்கு (1/10) குறையாத எண்ணிக்கை கொண்டவர்கள் விடுக்கின்ற எழுத்திலான கோரிக்கையின்பேரில் அதிவிசேட மகாசபைக் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கவேண்டும்.

(இ) ஏதேனும் வருடாந்த மகா சபைக் கூட்டத்தில் அல்லது உரியவகையில் அறிவித்தல் வழங்கப்பட்டிராத எந்தவோர் அலுவலும் கருத்திற்கொள்ளப்படலாகாது.

**(ஈ) மகாசபைக் கூட்டம் பற்றிய அறிவித்தல்**

குறைந்த பட்சம் இருபத்தொரு (21) நாட்கள் எழுத்திலான அறிவித்தல் கொடுத்து வருடாந்த மகாசபைக் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்படல் வேண்டும். அதிவிசேட மகாசபைக் கூட்டத்திற்காக குறைந்தபட்சம் பதினான்கு (14) நாட்கள் எழுத்திலான அறிவித்தல் வழங்கப்பட்டே கூட்டப்படல் வேண்டும்.அந்த திகதிகளுக்கு மேற்படி அறிவித்தல் அனுப்பப்படுகின்ற அல்லது அனுப்பப்பட்டதாக கருதப்படுகின்ற திகதி மற்றும் அது வழங்கப்படுகின்ற திகதி உள்ளடங்காதொன்பதோடு கூட்டம் நடைபெறுகின்ற இடம், திகதி மற்றும் நேரம் அதில் திட்டவட்டமாக காட்டப்பட வேண்டுமென்பதோடு விசேட அலுவலொன்று சம்பந்தப்பட்டதாக அமையின், இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படுகின்றவிதத்தில் அல்லது யாப்பின்கீழ் பணிமனையிடமிருந்து அத்தகைய அறிவித்தல் கிடைக்க உரிமையுள்ள எவரேனும் ஆட்களுக்கு, பணிமனையினால் மகாசபைக் கூட்டங்களில் விதப்புரை செய்யப்பட இடமுள்ள வேறேதேனும் விதம் இருப்பின் அந்த விதத்தில் அந்த அலுவல்களின் பொதுவான இயல்பு அறிவிக்கப்படல் வேண்டும்.

ஆயினும், பணிமனையின் கூட்டமொன்று இந்த பிரிவில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறையை விடக் குறைவான காலத்திற்குள் அறிவித்தல் மூலமாக அழைப்பு விடுக்கப்பட்டதுமான, சபையின் கூட்டமொன்று முறைப்படி அழைக்கப்பட்டதாக -

(i) வருடாந்த மகாசபைக் கூட்டமாக அழைப்பு விடுக்கப்பட்ட கூட்டம் சம்பந்தமானதாக அமையுமிடத்து, தமது பிரதிநிதிகள் மூலமாக இந்த கூட்டத்திற்கு வருகைதந்து வாக்களிப்பதற்கான உரிமை பெயர்ப்பட்டியலில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் : மற்றும்

(ii) வேறு ஏதேனும் கூட்டமொன்று சம்பந்தமானதாக அமையுமிடத்து, கூட்டத்திற்கு வருகைதந்து வாக்களிக்க உரிமை கிடைக்கின்ற, பெயர்ப்பட்டியலில் இருக்கின்ற உறுப்பினர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றைந்திற்கு குறையாத பிரிவினரை பிரதிநிதித்துவம் செய்து பெரும்பான்மையாக அமைகின்ற பெயர்ப்பட்டியலில் உள்ள உறுப்பினர் எண்ணிக்கையில் பெரும்பான்மை, பகுதியினர் அவ்வாறு இணங்கினால் அந்த கூட்டம் முறைப்படி அழைப்பு விடுக்கப்பட்டதாக கருதப்படல் வேண்டும்.

அறிவித்தல் கிடைப்பதற்கான உரிமையுள்ள எவரேனுமொருவருக்கு தற்செயலான தவறு காரணமாக கூட்டம் பற்றிய அறிவித்தல் வழங்க இயலாமல் போனமை அல்லது அவருக்கு அறிவித்தல் கிடைக்காமை மூலமாக அந்த கூட்டத்தின் அலுவல்கள் செல்லுபடி யற்றதாகாது.

(உ) பணிமனை எவரேனும் உறுப்பினருக்கு தனிப்பட்டமுறையில் அல்லது அவரது பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு தபாலில் அனுப்புதல் மூலமாக (அவருக்கு இலங்கைக்குள் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்று இல்லாவிட்டால்) அவருக்கு அறிவித்தல் வழங்குவதற்காக

அவரால் பணிமனைக்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் முகவரி இருப்பின் அந்த முகவரிக்கு தபாலில் அனுப்புவதன் மூலமாக அறிவிக்கலாம். அறிவித்தலை தபாலில் அனுப்புகையில் அறிவித்தல் அடங்கியுள்ள கடிதத்தை முறைப்படி விளித்தல், முன்கூட்டியே செலுத்துதல் மற்றும் தபால் செய்தல் மூலமாக அறிவித்தலை ஒப்படைத்தலை மேற்கொண்டதாகவும் அறிவித்தல் அடங்கிய கடிதத்தை தபால் பண்ணிய பின்னர் இருபத்திநான்கு மணித்தியாலங்கள் முடிந்தபின்னரான கூட்டம் சம்பந்தமானதாக அமையுமிடத்து அறிவித்தலை ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலும் வேறு ஏதேனுமொரு சந்தர்ப்பத்திலும் சாதாரண தபாலில் கடிதத்தை பகிர்ந்தளித்த நேரத்தில் ஒப்படைத்தாக கருதப்படல் வேண்டும்.

(ஊ) **மகாசபைக் கூட்டமொன்றில் வாக்களித்தல்**

பேரவைக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஓர் வாக்கு இருக்கவேண்டுமென்பதோடு ஏதேனுமொரு மகாசபைக் கூட்டத்தில் அந்த உறுப்பினரை பிரதிநிதித்துவம் செய்யவும் வாக்கினை அளிக்கவும் பேரவையால் அந்த பணிக்காக விதப்புரை செய்யப்பட்டுள்ள விதத்தில் ஒரு (01) பதிலாளை நியமிக்க உரிமை இருத்தல் வேண்டும். பதிலாள் நிலைமையை வகிக்கின்ற ஒவ்வொருவருக்கும் அந்த மகாசபைக்கூட்டத்தில் உரையாற்றுவதற்கான உரிமை உள்ளதோடு வருகைதந்துள்ள ஒவ்வொரு பதிலாளுக்கும் ஒரு வாக்கிற்கான உரிமை இருத்தல் வேண்டும்.

ஆயினும் எவரேனும் உறுப்பினர் நடப்பு வருடத்தின் மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னராக வருடாந்த பங்களிப்புத் தொகையை செலுத்தியிருந்தாலேயொழிய வருடாந்த மகாசபைக் கூட்டமொன்றில் வாக்களிக்கவோ அல்லது பேரவைக்கு அல்லது பணிப்பாளர் சபைக்கு தெரிவுசெய்யப்படவோ எந்தவோர் உறுப்பினரும் தகைமைபெற மாட்டார்.

(எ) **கூட்ட நடப்பெண்**

ஏதேனும் மகாசபைக் கூட்டத்தில், கூட்டம் அதன் அலுவல்கள் வரை முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற தருணமாகும்போது உறுப்பினர்களின் கூட்டநடப்பெண் இல்லாவிட்டால் எவ்விதமான அலுவலும் மேற்கொள்ளப்படலாகாது. இங்கு வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலேயொழிய, தனிப்பட்ட வகையிலோ அல்லது பதிலாள் மூலமாக வருகை தந்துள்ள, வருடாந்த பங்களிப்புத் தொகையை செலுத்தியுள்ள மற்றும் வாக்களிக்கும் உரிமையுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 30% கூட்ட நடப்பெண்ணை நிறுவுகின்றது.

கூட்டநடப்பெண் இல்லாதவிடத்து, கூட்டம் 15 நிமிடங்கள் இடைநிறுத்தப்பட்டு வருகைதந்துள்ள உறுப்பினர்களை மீண்டும் அழைப்பிக்க வேண்டிய போதிலும் அதன்போது கூட்டநடப்பெண்ணை நிறுவுகின்ற எண்ணிக்கையில் 07 பேருக்கு குறையாத எண்ணிக்கை இருத்தல் வேண்டும்.

(ஏ) உறுப்பினர்களின் வேண்டுகோளின்பேரில் அழைப்பிக்கப்பட்ட கூட்டமொன்று சம்பந்தப்பட்டதாக அமையுமிடத்து, தனது பதிலாட்கள் மூலமாக வருகைதந்துள்ள மற்றும் வாக்களிக்க உரிமையுள்ள பெயர்ப்பட்டியலில் இருக்கின்ற மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 1/ 3 கூட்ட நடப்பெண்ணை நிறுவுவதாக அமைதல் வேண்டும். கூட்டத்திற்காக குறித்த நேரத்தின் அரை மணித்தியாலத்திற்குள் கூட்டநடப்பெண் நிறுவப்படாவிட்டால் கூட்டம் கலைக்கப்படல் வேண்டும்.

வேறு ஏதேனும் கூட்டம் சம்பந்தப்பட்டதாக அமையுமிடத்து கூட்டத்திற்குப் பின்னர் அடுத்துறுகின்ற வாரத்தில் அதே தினத்திலேயே அதே நேரத்திலும் இடத்திலும் நடாத்த கூட்டம் இடைநிறுத்தப்பட வேண்டுமென்பதோடு இடைநிறுத்தப்பட்ட கூட்டத்தில், கூட்டத்திற்காக குறித்த நேரத்தின் அரை மணித்தியாலத்திற்குள் கூட்டநடப்பெண் நிறுவப்படாவிட்டால் வருகை தந்துள்ள உறுப்பினர்களில் இருந்து கூட்டநடப்பெண் தோன்றுவதாக கருதப்படல் வேண்டும்.

(ஐ) **கூட்டத்தின் தலைவர்**

(i) பேரவையின் தலைவர் மற்றும் அவர் சமுகமளித்திராவிடின் தெரிவு செய்யப்பட்டுள்ள தலைவர் மற்றும் அவர் சமுகமளித்திராவிடின் ஏனைய உப தலைவர்கள் மத்தியிலிருந்து ஒருவர் பணிமனையின் ஒவ்வொரு மகாசபைக் கூட்டத்திலும் தலைமை வகித்தல் வேண்டும். மேலே குறிப்பிட்ட பதவிதாங்குனர்கள் எவருமே வருகைதந்திராவிடின் பொதுச் செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் தலைவராக தலைமை வகித்தல் வேண்டும்.அத்தகைய தலைவரொருவர் இல்லாத சந்தர்ப்பத்தில் அல்லது கூட்டத்தை நடாத்துவதற்கு உரிய நேரத்தில் இருந்து பதினைந்து நிமிடங்களுக்குள் தலைவர், தெரிவுசெய்த தலைவர் அல்லது உப தலைவர்கள் எவருமே அல்லது பொதுச் செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் வருகை தந்திராவிடின் கூட்டத்தின் தலைவராக வருகை தந்துள்ள உறுப்பினர் மத்தியிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்படலாம்.

(ii) கூட்டநடப்பெண் உள்ள ஏதேனும் மகாசபைக் கூட்டத்தின் தலைவரால் வருகை தந்துள்ள உறுப்பினர்களின் விருப்பத்துடன், (மற்றும் கூட்டத்தினால் அவ்வாறு செய்யுமாறு பணிக்கப்பட்டால்) கூட்டம் காலத்திற்குக் காலம் மற்றும் இடத்திற்கிடம் இடைநிறுத்தப்பட இயலும்: ஆனாலும் அந்த இடைநிறுத்தப்படல் எந்தக் கூட்டத்தில் இடம்பெற்றதோ அந்த கூட்டத்தில் நிறைவுசெய்யப்படாமல் எஞ்சியுள்ள அலுவல்கள் தவிர்ந்த வேறு எந்த அலுவலும் இடைநிறுத்தப்பட்ட ஏதேனும் கூட்டத்தில் புரியப்படலாகாது. கூட்டமொன்று முப்பது நிமிடங்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட நேரத்திற்காக இடைநிறுத்தப் பட்டவிடத்து, புதிய கூட்டமொன்று சம்பந்தப்பட்டதாக கருதி இடைநிறுத்தப்பட்ட கூட்டம் பற்றி அறிவித்தல் வழங்கப்படல் வேண்டும். மேற்சொன்னவாறு தவிர்ந்தவிடத்து இடைநிறுத்தப்பட்டமை சம்பந்தமாக அல்லது இடைநிறுத்தப்பட்ட ஏதேனும் கூட்டத்தில் செய்யப்படுவதற்குரியதாக இருந்த அலுவல்கள் பற்றி அறிவிக்க வேண்டியது அவசியமாதலாகாது.

(iii) வேறுவிதமாக திட்டவட்டமாக குறிப்பிட்டிருந்தாலேயொழிய கூட்டமொன்றில் வாக்கெடுப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை நிறைவேற்றமொன்று சாதாரண பெரும்பான்மையுடன் அல்லது கைகளை உயர்த்துவதன் மூலமாக தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(iv) பிரேரணை நிறைவேற்றமொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அல்லது ஏகோபித்த வகையில் அல்லது ஏதேனும் திட்டவட்டமான பெரும்பான்மையில் அங்கீகரிக்கப் பட்டுள்ளதாக அல்லது தோல்வியடைந்துள்ளதாக அமைகின்ற தலைவரின் கூற்று மற்றும் பணிமனையின் கூட்ட அலுவல்களின் அறிக்கைகள் அடங்கியுள்ள புத்தகத்தில் அது சம்பந்தமான குறிப்பு, அத்தகைய பிரேரணை நிறைவேற்றத்திற்கு சார்பாக அல்லது எதிராக பதிவாகிய வாக்குகளின் எண்ணிக்கை அல்லது விகிதம் பற்றிய உறுதிப்படுத்தல் இன்றி இறுதியான சான்றிதல் வேண்டும்.

(v) வாக்குகள் சமமானதாக அமையுமிடத்து கூட்டத்தின் தலைவருக்கு இரண்டாவது அல்லது உறுதியிடும் வாக்கு இருத்தல் வேண்டும்.

(vi) மகாசபைக் கூட்டமொன்றுபற்றிய அறிவித்தல் கிடைக்க, பங்கேற்க மற்றும் வாக்களிக்க உரிமையுள்ள அப்போதைக்கான பெயர்பட்டியலில் உள்ள அனைத்து உறுப்பினர் களாலும் கையொப்பமிடப்பட்ட பிரேரணை நிறைவேற்றமொன்று, முறைப்படி அழைப்பு விடுக்கப்பட்ட பணிமனையின் மகாசபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதைப் போன்றே செல்லுபடியானதாகவும் வலுவில் உள்ளதாகவும் அமையும்.

*15.* ***நிலையியற் குழுக்கள்***

*(அ) பேரவையால் தீர்மானிக்கப்படுகின்றவாறு, அடிப்படையில் ஒதுக்கப்பட்ட விடயங்களுக்கு பொறுப்பாக இருக்கும்பொருட்டு பணிமனையின் உறுப்பினர்களின் பிரதிநிதிகளின் அல்லது தனியாள் உறுப்பினர்கள் சம்பந்தமானதாக அமையுமிடத்து அந்த உறுப்பினர்களை பிரத்தியேகமாக உள்ளடக்கிய நிலையியற் குழுக்கள் பேரவையினால் நியமிக்கப்படலாம்.*

*(ஆ) ஆலோசனை மற்றும் மதியுரைக்காக பணிமனைக்கு புறம்பான ஆளொருவரை நிலையியற் குழுவிற்காக அழைப்பு விடுக்கலாம்.*

*(இ) நிலையியற் குழுவொன்று பேரவை உறுப்பினர் மத்தியில் இருந்து வருடந்தோறும் அதன் தலைவர் மற்றும் அழைப்பாளரை தெரிவுசெய்ய வேண்டுமென்பதோடு அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டதை பேரவைக்கு அறிவித்தலும் வேண்டும்.*

*(ஈ) தனது விடயப்பரப்பைச் சேர்ந்த எந்தவொரு விடயம் சம்பந்தமாகவும் நிலையிற் குழுவானது, முகாமைத்துவ சபை, அதன் தலைவர் அல்லது பொதுச்செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஊடாக அறிக்கையிடல் வேண்டும்.*

*(உ) விசேட அவசர விடயமொன்றின்போது நிலையியற் குழுவின் தலைவர் அவராலேயே முகாமைத்துவ சபையின் கூட்டமொன்றுக்காக அத்தகைய அறிக்கையொன்றினை தயாரிக்கலாம்.*

*(ஊ) அவசியமானவிடத்து அவசியபாட்டின்படியும் குறைந்தபட்சம் மாதமொரு தடவையேனும் நிலையிற் குழுக் கூட்டம் நடைபெறவேண்டும்.*

*(எ) ஒவ்வொரு நிலையியற் குழுவினதும் அழைப்பாளர் அதன் தலைவரால் அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றதன் பிரகாரம் நிலையிற் குழுவின் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கவேண்டும்.*

*(ஏ) கூட்டம் பற்றி ஏழு நாளுக்கு முன்னராக எழுத்திலான அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்பதோடு கூட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அலுவல்கள் மற்றும் அதற்கான இடம், திகதி மற்றும் நேரம் அறிவித்தலில் திட்டவட்டமாக காட்டப்படல் வேண்டும். நாற்பத்தி எட்டு மணித்தியால அறிவித்தல் மூலமாக அவசர கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கலாம்.*

*(ஐ) நிலையிற் குழு அதன் கூட்ட நடப்பெண்ணை விதித்தல் வேண்டும்.*

*(ஒ) ஏதேனும் விடயம் வருகைதந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மையால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.*

*(ஓ) வாக்குகள் சமமானதாக அமைகின்ற வேளையில் தலைவருக்கு உறுதியிடும் வாக்கு இருத்தல் வேண்டும்.*

*16.* **கணக்குகள் :**

*(அ) பொதுச்செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் -*

(i) *பணிமனையினால் செலவுசெய்யப்பட்ட அனைத்து பணத்தொகைகளும் இந்த பணத்தொகைகள் எதற்காக செலவிடப்பட்டன என்ற விடயங்கள் சம்பந்தமாகவும்:*

(ii) *பணிமனையினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துவிதமான விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் ; மற்றும்*

(iii) *பணிமனையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக, முறைப்படி கணக்குகளை, அலுவல்களை மேற்கொள்ளச் செய்வித்தல் வேண்டும்.*

*(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் நியமிக்கப்படுகின்ற கணக்காய்வாளரால் பணிமனையின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுவதற்கும் நிதியாண்டு நிறைவடைந்து ஆறு (06) மாதங்களுக்குள் வருடாந்த மகாசபைக் கூட்டத்தை நடாத்த இயலச்செய்விக்கும் வகையில் இறுதி கணக்காய்வு அறிக்கையை நேரகாலத்தோடு பெற்றுக்கொடுக்கவும் பொதுச்செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஆவன செய்வித்தல் வேண்டும்.*

(இ) கணக்குப் புத்தகங்கள் பணிமனையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது பேரவையால் பொருத்தமானதென நினைக்கின்ற வேறேதேனும் இடத்தில் அல்லது இடங்களில் வைக்கப்படல் வேண்டுமென்பதோடு எல்லாநேரத்திலும் பேரவையின் உறுப்பினர்களின் பரிசீலனைக்காக திறந்துவைக்கப்பட்டதாக இருத்தலும் வேண்டும்.

(ஈ) பேரவையின் உறுப்பினர்கள் அல்லாத, உறுப்பினர்களின் பிரதிநிதிகளின் பரிசீலனைக்காக பேரவையின் கணக்குகள் அல்லது புத்தகங்கள் அல்லது அவற்றின் ஏதாவது திறந்ததாக வைக்கப்பட வேண்டுமோ,அவ்வாறு வைப்பதாயின் எந்த அளவுக்கு மற்றும் எந்த நேரங்களில் மற்றும் இடங்களிலும் என்பதையும் எத்தகைய நிபந்தனைகள் மற்றும் பிரமாணங்களின் கீழ் என்பதையும் பேரவை காலத்திற்குக்காலம் நிர்ணயித்துக்கொள்ள வேண்டுமென்பதோடு உறுப்பினர்களின் பிரதிநிதிகளுக்கு (பேரவையின் அங்கத்தவர்கள் அல்லவென்பதால்) சட்டத்தினால் அல்லது மகாசபைக் கூட்டத்தில் பேரவையினால் அல்லது பணிமனையினால் அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தாலேயொழிய பணிமனையின் எந்தவிதமான கணக்கு அல்லது புத்தகம் அல்லது ஆவணத்தை பரிசீலனை செய்வதற்கான உரிமை இருத்தலாகாது.

(உ) முந்திய நிதியாண்டுக்காக பணிமனையின் இலாப நட்டக் கணக்குகளையும் ஐந்தொகையையும் தயாரிக்கவும் மகாசபைக் கூட்டத்தில் பணிமனையின் முன்னால் சமர்ப்பிக்கவும் பொதுச்செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஒழுங்குகளைச் செய்யவேண்டும்.

(ஊ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் பிரதிகளுடன் மகாசபைக் கூட்டத்தில் பணிமனையின் முன்னிலையில் ஒவ்வொரு ஐந்தொகையினதும் பிரதியொன்று (சட்டத்திற்கு அமைவாக அதில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும் உள்ளிட்ட) பணிமனையின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒவ்வொரு தொகுதிக்கடன் பெறுனருக்கும் அத்துடன் இந்த பிரிவின்கீழ் பணிமனையிடமிருந்து அறிவித்தலொன்றைப்பெற உரிமையுள்ள ஒவ்வோர் ஆளுக்கும் வேறு எவரேனும் ஆளுக்கும், கூட்டத் திகதிக்கு முன்னர் இருபத்தொரு (21) நாட்களுக்கு குறையாத காலப்பகுதிக்குள் அனுப்பிவைத்தல் வேண்டும் : ஆயினும், பணிமனைக்கு முகவரி தெரியாத எவரேனுமொருவருக்கு பிரதிகளை அனுப்பிவைத்தல் இந்த பிரிவினால் பணிக்கப்படாதபோதிலும் இந்த ஆவணங்கள் அனுப்பப்பட்டிராத எவரேனும் உறுப்பினருக்கு அலுவலகத்திற்கு விண்ணப்ப பத்திரமொன்றை சமர்ப்பிப்பதன் மூலமாக பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள உரிமை இருத்தல் வேண்டும்.

(எ) குறைந்தபட்சம் வருடத்திற்கொரு தடவை, பணிமனையின் கணக்குகள் பரிசீலனை செய்யப்படல் வேண்டு மென்பதோடு இலாப நட்டக் கணக்கினதும் ஐந்தொகையினதும் திட்ப நுட்பத்தன்மை ஒரு கணக்காய்வாளரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கணக்காய்வாளர்களால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**17. கணக்காய்வாளர்கள் :**

(அ) கணக்காய்வாளர்களின் எண்ணிக்கை மற்றும் கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களின் பதவியை பூர்த்திசெய்யவேண்டிய ஆள் அல்லது ஆட்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தீர்மானிக்கப்படல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர்களின் ஊதியமும் அவரது அல்லது அவர்களின் பதவிக்காலமும் கணக்காய்வாளரால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(ஆ) திருப்தியற்ற செயலாற்றுகை காரணமாக பிறிதொரு கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்து வருடாந்த மகாசபைக் கூட்டத்தில் பிரேரணை நிறைவேற்றப்படுமிடத்து கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களாக வேறு எவரேனுமாள் அல்லது ஆட்களை நியமிக்குமாறு பணிமனை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கவேண்டும்.

(இ) எந்தவொரு மகாசபைக் கூட்டத்திற்கும் வருகைதரவும் ஏதேனும் மகாசபைக் கூட்டமொன்று தொடர்பாக எவரேனும் உறுப்பினர் உரிமைபெறுகின்ற அறிவித்தல் மற்றும் தொடர்பாடலைப் பெறவும் கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்கள் என்றவகையில் தமக்கு ஏற்புடைய கூட்ட அலுவல்களில் ஏதேனும் பகுதி சம்பந்தமாக விடயங்களை எடுத்துரைக்கவும் கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களுக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(ஈ) பணிமனையின் அனைத்துக் கணக்குகள், புத்தகம் மற்றும் ஆவணங்கள் ஏதேனும் கணக்காய்வுப் பணிக்காக கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களால் பரிசீலிக்கப்படுவதற்காக எல்லா நேரத்திலும் திறந்துவைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

*18.* **பொதுச்செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்**- தாம் பொருத்தமானவரென நினைக்கின்ற ஏதேனும் பணிப்புரை மற்றும் நிபந்தனையின் பேரில் பொதுச்செயலாளரொருவர் /பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரொருவரை நியமிக்கவும் அந்த ஆட்களின் சேவையை முடிவுறுத்தவும் பேரவைக்கு இயலும். பொதுச்செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பணிமனையின் பொதுவான நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமாக பொறுப்புக்கூறல் வேண்டுமென்பதோடு பணிமனையின் நிறைவேற்றுப் பதவியணியின் பிரதானியாக அமைதலும் வேண்டும். பொதுச்செயலாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பேரவையின் பணிமனை ஊடாக முகாமைத்துவ சபைக்கு பதிலளிக்க கடப்பாடு கொண்டிருத்தலும் வேண்டும்.

*19.* **பொது முத்திரை**

(அ) பணிமனையின் பொது முத்திரை பணிமனையினால் தீர்மானிக்கப்பட்டு ஆக்கப்படல் வேண்டுமென்பதோடு பணிமனையினால் அங்கீகரிக்கப்படுகின்ற விதத்தில் அது மாற்றியமைக்கப்படலாம்.

(ஆ) பணிமனையின் பொது முத்திரை பொதுச்செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

(இ) பணிமனையின் தலைவர் அல்லது தெரிவுசெய்யப்பட்ட தலைவர் மற்றும் பொதுச்செயலாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் அல்லது தாம் வருகை தந்திருந்தமைக்கான அடையாளமாக கையொப்பமிடுகின்ற முகாமைத்துவ சபையின் எவரேனும் உறுப்பினர் இருவரின் முன்னிலையிலன்றி எந்தவொரு சாதனத்திலும் அல்லது ஆவணத்திலும் பொறிக்கப்படலாகாது என்பதோடு அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*20.* **நடுத்தீர்ப்பு**.- நடுத்தீர்ப்பிற்காக ஏதேனும் பிணக்கு பணிமனைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, பேரவையால் நியமிக்கப்பட்ட குழுவொன்று, பேரவையால் அப்பணிக்காக நியமிக்கப்படக்கூடிய விதிகளின் பிரகாரம் தீர்மானமொன்றை பெற்றுக்கொடுக்கலாம்.

*21.* **தடைசெய்யப்பட்ட விடயங்கள் சம்பந்தமான உரையாடல்களை தடுத்தல்**.- பணிமனையின் அல்லது பேரவையின் அல்லது ஏதேனும் கூட்டமொன்றின் தலைவர், தனது அபிப்பிராயத்திற்கிணங்க அரசியல்ரீதியான ஏற்புடைமை உள்ள ஏதேனும் விடயத்தை பரிசீலனை செய்வதிலிருந்து அல்லது கலந்துரையாடுவதிலிருந்து தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.

*22.* **விதிகளுக்கான சேர்த்தல்கள், மாற்றியமைத்தல்கள் மற்றும் திருத்தங்கள்**.- பேரவை முதலில் இணங்கியிருந்தால் மற்றும் கம்பெனிகள் பதிவாளருக்கு சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொண்டிருந்தாலேயொழிய அக்காலத்தில் வலுவில் இருக்கின்ற அமைப்பக விதிகளில் ஏதேனும் சேர்த்துக்கொள்ளல், மாற்றியமைத்தல் அல்லது திருத்தஞ்செய்தல் மேற்கொள்ளப்படலாகாது. எவ்வாறாயினும் ஏதேனும் சேர்த்துக்கொள்ளல், மாற்றியமைத்தல் அல்லது திருத்தஞ்செய்தலை அமுலாக்க மகாசபைக் கூட்டமொன்றிற்கு வருகைதந்து வாக்களிக்க உரிமையுள்ள மற்றும் அங்கு வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பதிலாட்களின் மூன்றிலிரண்டு பங்கினரால் அல்லது தனியாள் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டதாக அமையுமிடத்து வருடாந்த மகாசபைக் கூட்டமொன்றில் அல்லது அதிவிசேட மகாசபைக் கூட்டமொன்றில் அவர்கள் அல்லது அவர்களின் பதிலாட்களால் அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட பிரேரணை நிறைவேற்றம் மூலமாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

*23.* **கலைத்தல்**.- பணிமனையை முடிவிடுகையில் அல்லது கலைக்கையில், அதன் அனைத்துக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் பணிமனையின் உறுப்பினர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. பணிமனையின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல தடைசெய்யப்பட்டுள்ளதுமான, பணிமனையின் உறுப்பினர்களால் கலைக்கப்படுகின்ற தருணத்தில் அல்லது அதற்கு முன்னராகவே தீர்மானிக்கப்படவுள்ள வேறேதேனும் நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்கு. அத்துடன் மேலே சொல்லப்பட்ட ஏற்பாடுகளை வலுவுக்கு கொண்டுவர இயலாமல் போகுமிடத்து ஏதேனும் அறக்கட்டளை நோக்கத்திற்கு அத்தகைய ஆதனங்கள் கொடுக்கப்படல் அல்லது கையளித்தல் மேற்கொள்ளப்படலாம்.

*24.* **சேத இழப்பீடு**.- பணிமனையின் சார்பில் தமது கடமைகளை ஒழுங்காகவும் நியாயமாகவும் நிறைவேற்றுகையில் தம்மால் புரியப்பட்ட ஏதேனும் செயலுக்காக பேரவையின் உறுப்பினரொருவர் அல்லது உறுப்பினர்கள் அல்லது பதவிதாங்குனர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்கு, வழக்கு அல்லது குடியியல் வழக்கு தொடரப்பட்டால், அந்த ஆள் அல்லது ஆட்களுக்காக எதிர்காப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு மேற்படிகுற்றவியல் வழக்கு, வழக்கு அல்லது குடியியல் வழக்கின் கிரயமும் செலவுகளும் பணிமனையினால் சேத இழப்பீடு செய்யப்படல் வேண்டுமென்பதோடு காலத்திற்குக்காலம் பணிமனையினால் பணிக்கப்படுகின்றதன் பிரகாரம் அந்த பணிக்காக பணிமனையின் ஆதனங்களும் நிதியங்களும் ஈடுபடுத்தப்படலாம்.

*25.* **பதிவேடு**.- (i) ஒவ்வோர் உறுப்பினரதும் பெயரும் முகவரியும் (ii) உறுப்பினரின் பெயர்பதிவேட்டில் குறிக்கப்பட்ட திகதி மற்றும் (iii) உறுப்பினரொருவர் உறுப்பினராதல் முடிவுறுத்தப்பட்ட திகதி மற்றும் பேரவையால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் வேறு ஏதேனும் தகவல்களை வழங்குகின்ற பதிவேடொன்று பேணப்படல் வேண்டும்.

*26.* **ஆவணங்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துதல்**.- இந்த விதிகளில் வேறுவிதமாக குறித்துரைக்கப் பட்டிருந்தாலேயொழிய பணிமனையில் தாக்கமேற்படுத்துகின்ற ஏதேனும் ஆவணங்கள் மற்றும் பணிமனை அல்லது பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பிரேரணை நிறைவேற்றம் மற்றும் பணிமனையின் அலுவல்களுடன் ஏற்படையதாகின்ற ஏதேனும் புத்தகம், அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் கணக்குகள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தவும் அவற்றின் பிரதிகள் மற்றும் அவற்றிலிருந்து பெறப்பட்ட பிரித்தெடுத்தல்கள் என்பதை உறுதிப்படுத்த தலைவருக்கு, தெரிவுசெய்யப்பட்ட தலைவருக்கு மற்றும் பொதுச் செயலாளருக்கு பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

*04-40*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.